# ONGC PUBLIC SCHOOL
# NERAVY - KARAIKAL

## ஓஎன்ஜிசி பொதுப்பள்ளியில் சுதந்திர தினவிழா கொண்டாட்டம்

**இடம்: நிரவி** **நாள்: 15.08.2023**

ஒஎன்ஜிசி பொதுப்பள்ளியில் **15.08.2023** செவ்வாய்க்கிழமையன்று காலை 7.00 மணியளவில் சுதந்திர தினவிழாவானது மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பள்ளியின் தாளாளர் திரு. கண்ணன் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பள்ளியின் கல்வி இயக்குநர் திரு.பொன்ராமன் அவர்கள் முதல்வர் திரு. இராஜவேல் அவர்கள் மற்றும் துணை முதல்வர் திரு. எட்வின் சாமுவேல் அவர்களின் வழிநடத்தலின்படி இவ்விழாவானது மிகச்சிறப்பாகத் தொடங்கியது.

விழாவின் தொடக்கமாக நம் சிறப்பு அழைப்பாளர்கள் குத்து விளக்கேற்றி பாரத மாதா, தமிழ்த்தாய், சுவாமி விவேகானந்தர் படத்திற்கு மலர் தூவி வணங்கினர். தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் அவர்கள் மூவண்ணக் கொடியினை ஏற்றி மரியாதை செலுத்தினார். கொடி வணக்கப்பாடல் பாடப்பட்டது. கொடிக்கு வணக்கம் செலுத்தும் வகையில் அணிவகுப்பு மரியாதை எம் பள்ளி மாணவர்களால் மிகச் சிறப்பாக செய்யப்பட்டு, உறுதிமொழி எடுக்கப்பட்டது. சிறப்பு விருந்தினருக்குப் பள்ளியின் தாளாளர் திரு. கண்ணன் அவர்கள் நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார். இவ்விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் பள்ளியின் சார்பில் வரவேற்று வரவேற்புரை வழங்கினார் எம்பள்ளி முதல்வர் அவர்கள். இதைத் தொடர்ந்து, மாணவர்கள் சார்பில் அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் வரவேற்பு நடனமும் கலைநிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பட்டன.

சிறப்பு விருந்தினர்களாக **ஓஎன்ஜிசி காவேரி அசெட் மேனேஜர் திரு. உதய் பாஸ்வான்** அவர்களும், ஓஎன்ஜிசி பொதுப் பள்ளியின் **தாளாளர் திரு. கண்ணன்** அவர்களும், **ஓஎன்ஜிசி காவிரி அசெட் பொதுமேலாளர் திரு. ஜோசப் ராஜ்** அவர்களும் வந்திருந்து விழாவை சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினர் அவர்கள் தம்முடைய சிறப்புரையில் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து செயல்பட்டால் தான் கல்வி சிறப்புற அமையும். அவற்றோடு, தொடர்ந்து, இப்பள்ளியில் நடைபெறும் ஒவ்வொரு செயல்பாடுகளும் மாணவர்களின் எதிர்காலம் வளம்பெறும் வகையில் சிறப்பான முறையில் பள்ளி நிர்வாகமானது திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றது என்பதையும் சுட்டிக்காட்டி பெருமைப்படுத்தினார். தொடர்ந்து, ஆசிரியர்கள் மாணவர்கள் எதிர்காலத்தை எதிர்நோக்கும் வகையில்





அவர்களை உருவாக்க வேண்டும். குழந்தைகளை நெறிபடுத்தி மாணவர்களை ஆளுமைத் திறன் மிக்கவர்களாகவும் நாட்டுப்பற்று மிக்க சிறந்த குடிமகனாகவும் உருவாக்க வேண்டும் என்றார்.

மேலும் நம் எதிர்காலம் வளமாக அமைய கல்வியே சிறந்தது என்றும் ஏட்டுக்கல்வியை விட அனுபவக்கல்வியே சிறந்தது என்றும் அனுபவத்தின் போது ஏட்டுக்கல்வியே நம்மை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் சிறந்த கருவியாக இருக்கும் என்றார்.

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**

என்னும் திருக்குறளை எடுத்துக்காட்டியும் தமிழில் சொல்லியும் அனைவரையும் பிரமிக்கச் செய்தும், சிறப்பான சிறப்புரை ஆற்றியம் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்விற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் மிகச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர். இறுதியாக துணை முதல்வர் திரு.எட்வின் சாமுவேல் அவர்கள் அனைவருக்கும் நன்றி நவில, வந்தேமாதரம் பாடல் இசைக்க அனைவரின் ஒத்துழைப்போடு இந்நிகழ்வானது செவ்வனே நிறைவுற்றது.